அ.வ எண் 113/2018(வாசா1)புஷ்பராஜ் தேதி:28.03.2022

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

எனது குடும்பத்தில் நான் தான் மூத்தவர் என்று சொன்னால் சரிதான். எனக்கு 1976 ம் வருடம் திருமணம் நடந்தது, 1980 க்கு பிறகு நான் தனியாக வியாபாரம் பார்க்க் ஆரம்பித்தேன் என்று சொன்னால் சரியல்ல.. குடும்பத்தோடுதான் வியாபாரம் செய்து வந்தேன். தற்பொழுது கடந்த 4 வருடங்களாக தனியாக சமையல் மட்டும் செய்து சாப்பிட்டு வருகிறேன். எனது அப்பாவின் இறப்பிற்கு பிறகு மூத்த மகன் என்ற முறையில் நான் தான் குடும்ப வரவு செலவு பார்த்து வருகிறேன். கடந்த 3 வருடங்களாக பிரதிவாதிகள் தனியாக வரவு செலவு கணக்கு பார்த்து வருகிறார்கள் எனவே 3 வருடங்களுக்கு முன்னர் உள்ள காலகட்டங்களுக்கு என்னிடம் வரவு செலவு கணக்கு இருக்கிறது. ஒரு கடை இருந்தது அதில் காரா சேவூ கடலை மிட்டாய் வியாபாரம் செய்து வந்தோம். மேலும் ஒரு ரைஸ் மில் இருந்தது கடந்த 3 வருடங்களாக ரைஸ் மில் செய்ல்படவில்லை. மேற்படி ரைஸ் மில்லில் எண்ணெய் ஆட்டி எடுக்கின்ற இயந்திரமும் இருந்தது. கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் உள்ள மேற்படி ரைஸ் மில் எண்ணெய் இயந்திரம் வரவு செலவு கணக்கு என்னிடம் இருக்கிறது. எனது அம்மா இறந்த பிறகு பிரதிவாதிகள் என் பேச்சை கேட்கவில்லை. அதனால் தான் நான் தனியாக போய்விட்டேன். எவ்வளவு தொகை எடுத்துக்கொண்டு நான் தனியாக எப்பொழுது சென்றேன் என்றால் பிரதிவாதிகள் எனக்கு பணம் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் எப்பொழுது சென்றேன் என்று குறிப்பாக ஞாபகம் இல்லை. எவ்வளவு தொகை நான் வெளியே செல்லும் நாளில் வரவு செலவு கணக்கு இருந்து என்று என்னால் சொல்ல முடியாது . கலிடைகுறிச்சியில் உள்ள எனகது சித்தப்பா கிருஷ்ணசாமியிடம் இது பற்றி சொன்னேன். எனது சித்தப்பா எனது தம்பிகளிடம் அடறிவுரை கூறி எனக்கு பணம் கொடுக்கும் படி சொன்னார் அப்பொழுது கணக்கு பார்க்கப்பட்டது. எவ்வளவு தொகை என்று ஞாபகம் இல்லை. ஆனால் பிரதிவாதிகள் சமாதானத்திற்கு வரவில்லை. நான் மேலே சொன்ன சநததிகளை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். குறிப்பான காரணங்கள் எதுவும் கிடையாது. வழங்கறிஞர் அறிப்பு 2018 ல் அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்னர் 2016 ம் வருடம் ஒரு நோட்டிஸ் நான் அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி நோட்டிஸ்

என்னிடம் காட்டப்படும் நோட்டிஸ் ஆகும் . அது பிசா ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிசா ஆ 1நோட்டிஸ் அனுப்பும் பொழுது நாங்கள் சேர்ந்து தான் இருந்தோம். பிசா ஆ 1நோட்டிஸ்யில் சொல்லப்பட்டுள்ள கடைகள் பொதுக்குடும்ப கடைகள் தான். மேற்படி கடைகளை ஏன் வழ்க்கில் காட்டவில்லை என்றால் அது கழுகுமலை கழுகாசலமூர்த்தி கோவில் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்டது. மேற்படி கடைகள் 1977ல் ஆரம்பிக்கப்பட்டது. ரூபாய் 10000 முதலீட்டில் தொடங்கப்பட்டது. எனது அப்பா இருந்த காலகட்டத்தில் கடைகளை நான் தான் வைத்து கொட்டுத்தேன் வரவு செலவு கணக்கு நான் தான் பார்த்தேன். பிசா ஆ 1 நோட்டிஸ் அனுப்பிய தேதியில் மேற்படி கடையில் சுமார் 20000 ஆயிரம் ரூபாய் பொருட்கள் இருந்திருக்கும் . மேற்படி பொருட்களை பணமாக்கி பிரதிவாதிகள் கையில் வைத்துக்கொண்டார்கள். பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள். பிரதிவாதிகள் பிறகு பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். மேற்படி பதில் அறிவிப்பு என் கையில் கை வசம் உள்ளது. அதை என்னால் தாக்கல் செய்ய முடியும் . பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை வேண்டுமென்றே மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பதில் அறிவிப்பு பிரதிவாதிகள் அனுபியிதாகும் அது பிசா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பதில் அறிவிப்பில் எனக்கும் மேற்படி கடைக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை சொல்லப்பட்டுள்ளது என்றும் அதனால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. சொத்தின் பத்திரங்கள் என் கைவசத்தில் முதலில் இருந்தது பின்னிட்டு எனது அம்மாடவிடம் நான் அதை கொடுத்துவிட்டேன் தற்பொழுது பிரதிவாதிகளிடம் இருக்கிறது. 1980க்கு பிறகு கூட்டுக்குடும்பத்தில் நான் உறுப்பினராக இல்லை என்றும் நிர்வாகம் நான் பார்த்ததுஇல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தற்சமயம் குடியிருக்கும் வீடு 3ம் பிரதிவாதியின் வீட்டிற்கு அடுத்த வீடு என்று சொன்னால் 3ம் பிரதிவாதியின் வீட்டில் இருந்து மேற்கு பக்கம் 4வது வீட்டில் நான் இருந்து வருகிறேன். 4 வீடுகளிலும் மாடி வீடு இருக்கிறது நான் குடியிருக்கும் வீட்டில் மாடி கிடையாது. மொத்தம் 9 வீடுகள் மேற்படி 9 வீடுகளும் இந்த வழக்கில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். 1984ம் வருடம் வீடு வாங்கும் பொழுது 2 வீடுகளும் காலி இடம் இருந்தது. மேற்படி காலி இடத்தில் 1984 ம் வருடம் நான் குடியிருக்கும் வீடு கட்டப்பட்டது. மற்ற வீடுகள் பின்னிட்டு கட்டப்பட்டது. 25

வருடங்களுக்கு மேலாக மேற்படி 9 வீடுகளும் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி 9 வீடுகள் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் கிடையாது. சொத்துக்களை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் அதனால் தான் வழக்கில் காட்டவில்லை என்று சொன்னால் என்றால் சரிதான். தாவாவில் மொத்தம் 5 அயிட்ட சொத்துக்கள் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 1 வது அயிட்டம் சொத்து பூர்வீக வீடாகும். பழைய வடக்கு தெரு தற்பொழுது திருமாளிகை தெருவாக மாறி இருக்கலாம். 1 வது அயிட்டம் மற்றும் 2 வது அயிட்டம் சொத்துக்கள் அடுத்தடுத்த சொத்துக்களாகும். 2 வது இன சொத்தில் மொத்தம் 4 வீடுகள் இருக்கிறது. 2 வது இன சொத்து பூர்வீக வீடாகும் கிரையம் வாங்கவில்லைது. அதில் உள்ள பழைய வீட்டை இடித்துவிட்டு 1990 ல் புது வீடு கட்டினோம். மேற்படி கணக்குவழக்கு எனது அம்மாவிடம் உள்ளது. என் கையில் எதுவும் இல்லை. 3 வது அயிட்ட சொத்து குறித்து வாதுரையைப் பார்த்தால் தான் சொல்ல முடியும். 3 வது அயிட்ட சொத்தில் உள்ள ஒரு வீட்டில் எனகு தம்பி 4 ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். மேற்படி 3 ம் இன சொத்தில் ஒரு வீடுதான் இருக்கிறது. ஆனால் மாடி இருக்கிறது. 3 ம் அயிட்ட சொத்தில் 13 ம் கதவு எண் வீடு இல்லை என்றும் 13 எ 13 பி கதவு எண்கள் வீடுகள் இருக்கிறது என்றும் அதில் ஒன்றில் நான் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீடு விபரங்களை என்னால் சரியாக சொல்ல முடியவில்லை என்றும் நான் நிர்வாகத்தில் இல்லாததால் என்னால் சொல்லமுடியவில்லைஎனறர்ல் சரியல்ல. 5 வது அடியடட சொத்து எனது அம்மாவழி சொத்தாகும் எனது அம்மா பெயர் கிருஷ்ணம்மாள் . எனது அம்மாவின் தாத்தா பொன்னுச்சாமி நாடார் சொத்தாகும். மேற்படி சொத்து சம்பந்தம்மாக பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயாருடன் பிறந்த சகோதரி கலஞ்சியம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கலஞ்சியம்மாளுக்கு ஒரே மகள் என்றும் அவர் இறந்து விடடார் என்றும் அவருக்கு பாலசரஸ்வதி, நாராயணமூர்த்தி ஆகிய 2 வாரிசுகள் இருக்கிறார் என்றால் சரிதான். எனவே 5 ம் அயிட்ட சொத்தில் மேற்படி கலஞ்சியம்மாள் வழிவகை வாரிசுகளுக்கு உரிமை உண்டு என்றும் அவர்களை கட்சி சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். மேற்படி சொத்தில் உள்ள வீடு பிரதிவாதிகள் கட்டினார் என்றால் சரியல்ல. நானும் சேர்ந்து கட்டினேன். எவ்வளவு செலவானது என்று ஞாபகம் இல்லை. நிலத்தின் விஸ்தீரணம் பார்த்தால்

தான் சொல்லமுடியும் ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் மற்ற உரிமையாளர்களிடம் கிரையம் வாங்கி 5ம் அயிட்ட சொத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றும் எனவே அதில் நான் பாகப்பிரிவினை கோரமுடியாது என்றால் சரியல்ல. 1980ல் நான் தனியாக பிரிந்து கடலை வியாபாரம் செய்தேன் என்றும் அதில் நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நஷ்டத்தை பிரதிவாதிகள் பொதுக்குடும்ப சொத்தில் வருமானத்தில் இருந்து மீட்டார்கள் என்றால் சரியல்ல. எனது தந்தை 1991ல் இறந்தர் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்.லை. எனது அப்பா இறந்த பிறகு என்னுடைய பங்கை கேட்டேன் என்று சொன்னால் சரிதான். எனது சித்தப்பா துரைசாமி நாடார் எனக்கு பணமாக எனது பங்கை தருவதாக பேசி முடித்தார் என்றால் சரியல்ல. அதன்படி 1996ல் நான் பணம் வாங்கிக்கொண்டு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாசா ஆ 9ல் பிரதிவாதிகள் விடுதலை ஆவணத்தைப்பற்றி சொல்லி உள்ளார் என்றால் பொய்யாக சொல்லியுள்ளார்கள். மேற்படி விடுதலை ஆவணம் சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். துரைசாமி நாடார் மற்றும் அருமைநாயகம் நாடார் மகன் இன்னாசி நாடார் ஆகியோர் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். மேற்படி விடுதலை ஆவணத்தில் மேற்படி நபர்கள் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை .நான் எழுதி கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வாதுரையில் என் கையெழுத்து இல்லை சாட்சி மீண்டும் வாதுரையை பார்த்துவிட்டு பின் பக்கங்களில் எனது கைபெழுத்து இருக்கிறது என்று ஒத்துக்கொண்டார். எனது சித்தப்பா துரைசாமி நாடார் மற்றும் இன்னாசி நாடார் ஆடிகயோருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது. மேற்படி சாட்சிகள் முன்னிலையில் நான் விடுதலை ஆவணம் எழுது கொடுத்துவிட்டு தற்பொழுது பொய்யாக சாட்சி அளிக்கிறோன் என்ாறலல் சரியல்ல. எனவே 1996ம் வருடம் விடுதலை அவணம் எழுது கொடுத்த பிறது வழக்கு சொத்துக்கும் எனக்கும் எந்க சம்பந்தமும இல்லை என்றால் சரியல்ல. எனவே பாகம் கோரி நான் தாக்கல் செய்த வழக்கு நிலை நிற்க தகுந்தது அல்ல என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டை காலி செய்ய கோரி பிரதிவாதகிள நோட்டிஸ் அனுப்பி யுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட மன உழைச்சலுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி